# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029120

1. District : திருவண்ணாமலை PS: ஊ.த.க பிரிவு அலுவலகம் திருவண்ணாமலை Year: 2018 FIR No.: 04/2018 Date: 21-05-2018
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: PC Act 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04/05/18 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு மாலை சுமார் 4 மணி. Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.05-2018 Time : நேரம் பகல் 2மணி.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஸ்வஸ்திக் நகர், பெரிய தெரு, திருவண்ணாமலை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N.ஜெயச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நாராயணசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54/2018 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் உதவி சாயம் மற்றும் ஸ்வஸ்திக் சாயத் தொழிலகம் (g) Address : முகவரி எண் 28, அருணாசலம் பாண்டியன் தெரு, திருத்தேர் [illegible] [illegible] மாவட்டம். 605757

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. சுரேந்திரன், நகர சர்வேயர், வட்டாட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
[illegible] தாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Jayachandran 21/5/18 — 21/5/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.05.2018 - 0930 Hrs

Name: பெயர் V. SARAVANA KUMAR
Rank: நிலை DSP No. எண் ..........
VYAC, Tiruvannamalai

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

பணிந்து அனுப்பப்படுகிறது:- திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 18.05.2018-ம் தேதி பிற்பகல் 14.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு. N.ஜெயசந்திரன் வயது 54 த/பெ நாராயணசாமி, எண்.28, அருணாசலம் பிள்ளை தெரு, திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்த புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனு பின்வருமாறு, விடுநர் N.ஜெயச்சந்திரன், வயது.54, த/பெ நாராயணசாமி, எண்.28, அருணாச்சலம் பிள்ளை தெரு, திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம்.-605 757. பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். நான் பழைய கல்வி திட்டத்தில் SSLC படித்துள்ளேன். திருக்கோவிலூர் அருகில் உள்ள புத்தூர் கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக சுமார் 4 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது அதில் விவசாயம் செய்து வருகிறோம். திருக்கோவிலூரைச் சேர்ந்த எனக்கு பழக்கமான திரு.சுனில்குமார் மற்றும் திரு.பாரஸ் சந்த் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து சென்னையில் பாரஸ்சந்தன் எண்டர்பிரைசஸ் என்ற அறக்கட்டளையை நிறுவி நடத்திக்கொண்டு வருகின்றனர். பாரஸ் சந்தன் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் கடந்த சுமார் 2½ ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் இட்ட ஏலத்தில் திருவண்ணாமலை நகரில் பெரிய தெருவில் இருந்த சுதர்ஸனா லாட்ஜ், திருவண்ணாமலை நகர கொசத்தெருவில் உள்ள சுமார் 1274 சதுரஅடி அளவுள்ள மாடி வீடு மற்றும் திருவண்ணாமலை அணைக்கரை பகுதியில் சுமார் 1 ஏக்கர் 18 சென்ட் நிலம் ஆகியவற்றை எடுத்து தற்போது பாரஸ் சந்தன் அறக்கட்டளையின் வசம் இருந்து வருகிறது. திரு.சுனில்குமார் மற்றும் பாரஸ் சந்தன் இருவரும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதால் நான் மேற்கண்ட சொத்துக்களை நிர்வகித்து வருகிறேன். திருவண்ணாமலை பெரிய தெருவில் இருந்த சுதர்ஸனா லாட்ஜை தற்போது ஸ்வஸ்திக் லாட்ஜ் என பெயர் மாற்றம் செய்து பாரஸ் சந்தன் அறக்கட்டளை சார்பில் நான் நிர்வாகம் செய்து வருகிறேன். மேலும் திருவண்ணாமலை கொசத்தெருவில் உள்ள வீடு இருக்கும் இடத்திற்கான TSLR நகல் பெற எங்களுடைய ஸ்வஸ்திக் லாட்ஜில் மேலாளராக பணிபுரியும் திருமதி.கலைவாணி என்பவரை கடந்த 12.04.2018-ம் தேதி திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்திலுள்ள திருவண்ணாமலை நகர சர்வேயர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன். சர்வேயர் அலுவலகத்திலுள்ள தலைமை சர்வேயர் அவர்கள் திருமதி.கலைவாணியிடம் விவரம் கேட்டறிந்து TSLR நகலுக்காக மனு செய்ய வேண்டாம் எனவும் நேரடியாக பட்டா மாற்றம் செய்து கொள்ளும்படியும் கூறி நாங்கள்

கொடுத்த மனுவை பட்டா மாற்றம் செய்ய திருத்தி அவரிடம் தெரிவித்துவிட்டு சர்வேயர் திரு.கருணாகரன் அவர்களிடம் அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து சுமார் 5 முறை சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திரு.கருணாகரன் அவர்களிடம் நேரில் கேட்டதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. நானும் மனு கொடுத்தபிறகு இரண்டு முறை சென்று பார்த்து பட்டா மாற்றம் செய்வதற்காக சர்வேயர் திரு.கருணாகரன் என்பவரை நேரில் சென்று பார்த்தேன் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. கடந்த 04.05.2018-ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் எங்களுடைய ஸ்வஸ்திக் லாட்ஜிடம் சர்வேயர் திரு.கருணாகரன் அவர்கள் வந்து வீடு இருக்கும் இடத்தை அளக்க வேண்டும் என கூறி இடத்தை காண்பிக்கச்சொன்னார், நான் லாட்ஜில் பணிபுரியும் ஒருவரை சர்வேயர் திரு.கருணாகரன் என்பவருடன் அனுப்பி வைத்தேன், அவர்களும் கொசத்தெருவில் உள்ள மாடிவீட்டை அளந்து பார்த்துவிட்டு திரும்பவும் லாட்ஜிக்கு வந்து சர்வேயர் திரு.கருணாகரன் என்னை சந்தித்து இடத்தை பார்த்துவிட்டோம். நீங்கள் வந்து எங்களை பார்த்து கவனித்துவிட்டால் வேலையை முடித்துவிடலாம் என சொன்னார். நான் திரும்ப என்னவென்று கேட்டேன் அதற்கு சர்வேயர் திரு.கருணாகரன் ரூ.20,000/- இலஞ்சமாகத் தரவேண்டும் சொன்னபடி ரூ.20,000/- கொடுத்துவிட்டால் வேலையை முடித்துவிடலாம் என கூறி சென்றுவிட்டார். அதன்பிறகு நான் அவரை பார்க்கவில்லை எனக்கு ரூ.20,000/- இலஞ்சமாகக் கொடுத்து பட்டா மாற்றம் செய்வதற்கு விருப்பமில்லை. கடந்த இரண்டு வாரமாக நானும் என்ன செய்வதென்று தெரியாமல் மனக்குழப்பத்தில் இருந்து வந்தேன். இன்று 18.05.2018-ம் தேதி பகல் 2 மணிக்கு திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து வீட்டை பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக பணம் ரூ.20,000/- இலஞ்சமாக கேட்ட சர்வேயர் திரு.கருணாகரன் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தட்டச்சு செய்த ஒரு புகார் மனுவை தெரிந்தவர் மூலம் தயார் செய்து கொண்டு புகார் அளிக்கிறேன், நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு SD/XXX N.Jayachandran 18.05.2018.

Sir,

Received the complaint on 18.05.2018 @ 1400 hrs., and the same was forwarded to the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai on 18.05.2018. Sd/-xxxx V.Saravanakumar, 18.05.2018/DSP/V&AC/TVM.

On the orders of DVAC/Chennai a Preliminary enquiry in PE 142/2018/SUR/TVM, Dated: 18.05.2018, was registered on 18.15.2018 @ 15.00 hrs. Sd/-xxxx V.Saravanakumar, 18.05.2018/DSP/V&AC/TVM.

During the preliminary enquiry the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through sources on 21.05.2018 and after obtaining concurrence from DVAC/Chennai a case in Vigilance and Anti-Corruption, Tiruvannamalai Detachment Cr. No. 04/2018, u/s. 7 of P.C.Act-1988 was registered on 21.05.2018 at 07.00 hrs. Sd/-xxxx V.Saravanakumar, 21.05.2018/DSP/V&AC/TVM.

பதிவு செய்யப்பட்ட அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி திருவண்ணாமலை அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

V. Saravanakumar 21/5/18

DSP, V&AC/
Tiruvannamalai.